# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.19/2014

PW1– குணசேகரன் நாள்.15.07.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 12ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கை 2014ம் ஆண்டு பாகப்பிரிவினைக்காக என் தகப்பனார் மற்றும் உடன் பிறந்தவர்கள் மீது தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பிராது மற்றும் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்ய நான் தான் விவரம் சொன்னேன். 2023ம் ஆண்டில் 12 முதல் 14 பிரதிவாதிகள் வங்கிகளை வழக்கில் சேர்க்க மனு செய்தேன் என்றால் சரிதான். 12ம் பிரதிவாதியின் வங்கி கிளையில் என்அப்பா கணக்கில் பணம் வைத்துள்ளார் என்று அவரை கட்சி சேர்த்தேன் என்றால் சரிதான். பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்தில் மற்றும் மனுவில் என்தகப்பனாரின் வங்கி கணக்கு விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனக்கு அந்த கணக்கு எண் தெரியாது. 12ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் என்அப்பா பெயரில் கணக்கு இல்லை என்று கூறிஇருந்த விவரம் தெரியும். என் தகப்பனார் பெயர் சின்னராஜு ஆகும். அவருடைய தகப்பனார் பெயர் முத்து வெங்கடாசல ரெட்டியார் ஆகும். ஊர் அய்யர்பாளையம் என்றால் சொந்த ஊர் அரும்பாவூர் மேட்டுர் ஆகும். சொத்துக்கள் அய்யர்பாளையளத்தில் இருந்ததால் அங்கு குடி இருந்தோம். 1968ல் என்அப்பா அய்யர்பாளையம் வந்தார். இந்த விவரத்தை பிராது, நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்அப்பாவை சூடாமணி என்றும் பட்ட பெயரால் கூப்பிடுவார்கள். இந்த விவரத்தை பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 12ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் என் தந்தையின் பான்கார்டு நகல், ஆதார் கார்டு நகல், 12ம் பிரதிவாதி பாஸ்புத்தகம் நகல் ஆகியவற்றை கொடுத்தால் கணக்கு உள்ளதா என்று சரிபார்க்க முடியும் என்று கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை இதுவரை வங்கியிடம் நான் கொடுக்கவில்லை

என்றால் சரிதான். என்அப்பாவின் இறப்பு சான்று தாக்கல் செய்வில்லை என்றால் சரியல்ல. வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்அப்பா இறந்த விவரத்தை 12ம் பிரதிவாதிக்கு நான் எழுத்து பூர்வமாக தெரிவிக்கவில்லை. என்அப்பாவின் கணக்கு விவரத்தை கொடுக்குமாறு நான் தனிப்பட்ட முறையில் 12ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை. நீதிமன்றத்தில் வங்கியுள்ள பணம் சம்மந்தமாக வாரிசு சான்றிதழ் வழங்கக்கோரி நானோ, என் உடன் பிறந்தவர்களோ மனு செய்யவில்லை என்றால் சரிதான். 12ம் பிரதிவாதி வங்கி கிளையில் இருந்து பணத்தை 4ம் பிரதிவாதி எடுத்து விட்டதாக பிராதிலோ, நான் தாக்கல் செய்த மனுவிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி ஆள்பலத்தால் வங்கியை மிரட்டி பணம் எடுத்துவிட்டதாக நிருபண வாக்குமூலத்தில் முதன்முதலில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். இது சம்மந்தமாக காவல்துறை மூலமாக நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. ஒரு யூகத்தின் அடிப்டையில் என்அப்பா 12ம் பிரதிவாதி வங்கி கிளையில் கணக்கு வைத்துள்ளதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியை நாமினியாக என்அப்பா காட்டி அவர் பணத்தை எடுத்துவிட்டதாக பிராதிலோ, மனுவிலோ நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இதுசம்மந்தமாக 4 மற்றும் 12 பிரதிவாதிகள் மீது நடடிவக்கை எடுக்கவில்லை. 12ம் பிரதிவாதியின் வங்கி கிளையில் என்அப்பா வங்கி கணக்கு எதுவும் வைத்திருக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்னர் 12ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்பு என்அப்பாவின் பான்கார்டு, ஆதார் அட்டை நகல், வங்கி பாஸ்புத்தகம் நகலை கொடுக்கவில்லை என்றால் சரிதான். 12ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு தேவையில்லாத நபர் என்றும், அவரை பொருத்து வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.